
6.50
Not for Sale.

# தாரா வளர்ப்பு



கல்வி பயிற்சி தகவல் பிரிவு
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கற்றம்பே – பேராதனை.

விலை. ரூபா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தாராக்கள் மகிழ்வளிக்கின்ற பறவைகள். தாராக்களை நாங்கள் பொருளாதார நோக்கத்திற்காகப் பயன்படுத்தலாம். தாராக்களை நாங்கள் முட்டை இறைச்சி அல்லது இவை இரண்டிற்குமாக வளர்க்கலாம். கோழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தாராக்களுக்கு நுணுக்கமான வசதிகள் தேவை இல்லை. இதனால் தாராக்களை வளர்ப்பது மிக இலகுவானதொன்றாகும்.

PP 004227 – 1,000 (93/3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாரா வளர்ப்பினால் கிடைக்கும் பயன்கள் | 1 |
| 2. | தாரா இனங்கள் | 2 |
| 3. | தாராக் குஞ்சுகளின் பராமரிப்பு | 6 |
| 4. | நீர், உணவு விநியோகம் | 10 |
| 5. | ஆண், பெண் இலிங்க வேறுபாடு | 14 |
| 6. | வீடமைப்பு | 16 |
| 7. | முட்டைக்கான பறவைகளைத் தேர்ந்தெடுத்தல் | 17 |
| 8. | இறைச்சிக்கான பறவைகள் | 17 |
| 9. | தாரா வளர்ப்பின் பொருளாதாரம் | 18 |
| 10. | நோய்த்தடுப்பு முறைகள் | 18 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரா வளர்ப்பினுல் கிடைக்கும் பயன்கள்

1. தாரா இனங்களில் சில நன்கு முட்டையிடும் இனங்களாகும். இவை கிட்டத்தட்ட மூன்று வருட காலங்களிற்கு முட்டையிடக்கூடியன.

2. தாரா முட்டைகள் கோழி முட்டைகளைவிடப் பெரியனவையும் பாரமானவையுமாகும்.

3. தாராக்களின் வளர்ச்சி வீதமும், உணவு மாற்றும் திறனும் கோழிகளைப் பார்க்கிலும் அதிகமாகும்.

4. நோய் எதிர்ப்புச் சக்தியும், கோழிக்குஞ்சிலும் பார்க்க அதிகமானதாகும்.

5. தாராக்களுக்கு நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட வீடுகள் தேவையில்லை.

6. தாராக்கள் சிறிய புற்களையும், நத்தைகளையும், நுளம்புக் குடம்பிகளையும், சிறு புழுக்களையும் உணவாக்க் கொள்ளும்.

7. தாரா வளர்ப்பிற்கு பழைய நீர்த்தேக்கங்களையும் சதுப்பு நிலங்களையும் பயன்படுத்தலாம்.

8. தாராக்களையும், நன்னீர் இன மீன்களையும் ஒன்று சேர்த்து வளர்க்க முடியும்.

9. தாரா வளர்ப்பிற்கு தாழ்ந்த வடிகால் அமைப்புப் பிரதேசங்களையும் பயன்படுத்தலாம். இதனுல் சூழல் மாசுபடுவதைக் குறைக்கலாம்.

10. தாரா முட்டைகளை இனிப்புக்கள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தலாம்.

11. தாரா முட்டைகளும் கோழி முட்டைகளைப் போன்று சம அளவான போசணைப் பதார்த்தங்களைக் கொண்டுள்ளது. தாரா முட்டைகளும் கோழி முட்டைகளும் போசாக்கில் ஒரே மாதிரியானவை.

12. 8 – 10 கிழமைகள் வயதுள்ள தாராக்களை இறைச்சிக்கு சந்தைப்படுத்தலாம்.

13. தாராக்கள் இறைச்சி, முட்டை, இறகுகள் என்பவற்றிற்காக வளர்க்கப்படுகின்றன. (இறகுகளில் இருந்து கம்பளங்கள் தயாரிக்கலாம்.)

14. தனிப்பட்ட ஒருவரினுல் 4000 – 5000 வரை எண்ணிக்கையிலான தாராக்களைப் பராமரிக்க முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாரா இனங்கள்

உங்கள் தெரிவு

| இறைச்சிக்குரிய இனம் | முட்டைக்குரிய இனம் | இறைச்சி. முட்டைக்கு உகந்த இனம் |
|---|---|---|
| 1.அயில்ஸ்பெரி<br>2.பீகின்<br>3.மஸ்கோவி | காகி கம்பெல்<br>இந்தியன் றணர் | வெலுவி<br>பெற்றோஸ் |

**அயில்ஸ்பெரி**




வெள்ளை நிறமானது. கால்கள் கட்டையானவை. வலிமையானதும் செம்மஞ்சள் நிறமானதுமாகும். சொண்டு (இளஞ்சிவப்பு) றோஸ் நிறமானது. இறைச்சிக்குரிய இனமாகும். வளர்ச்சி வீதம் கூடியதாகும். உடம்பு அகலமானதும் நீளமானதுமாகும். நெஞ்சுப் பகுதி எடுப்பான தோற்றமுடையதாகும். 9 கிழமைகள் வயதானவுடன் இதனை சந்தைக்கு அனுப்பலாம். இக்காலத்தின்போது இதன் நிறை 2.5 கிலோ கிராம் ஆக இருக்கும். நீங்கள் பீகின் தாரா இனத்தை வைத்திருந்தால் இதனை அயில்ஸ்பெரி இனத்துடன் கலப்பில் ஈடுபடுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது. சுவை மிக்க இறைச்சியைக் கொண்ட ஓர் புதிய இனத்தைப் பெறலாம். முட்டையிடும் அயில்ஸ்பெரி இனங்கள் ஒரு வருடத்தில் ஏறக்குறைய 100 முட்டைகளை இடும். முட்டைகள் 28 நாட்களில் குஞ்சு பொரிக்கும்.

**பீகின்**



இவ்வினம் இறைச்சி உற்பத்தியில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அயில்ஸ்பெரி இனத்திலும் பார்க்க இவ்வினம் அதிகமான முட்டைகளை இடும். (ஒரு வருடத்திற்கு 110 - 130 முட்டைகள்) சொண்டும், கால்களும் மெல்லிய மஞ்சள் நிறமானது. பாரமான இனமாகும். உடலமைப்பு அகலமானதும் ஆழமானது மாகும். அடைகாக்கும் இயல்பு அற்றது. எளிதில் அதிர்ச்சிக்குட்படக்கூடியது. குஞ்சு பொரிக்கும் காலம் 28 நாட்கள். இறகுகளை கம்பளங்கள் தயாரிப்பதற்காக உபயோகிக்கலாம். 8 கிழமைகள் வயதாகும்போது இதன் நிறை 2.5 கிலோ கிராம் உடையதாகும். 8 - 9 கிழமைகள் வயதாகும்போது இதனை இறைச்சிக்காக சந்தைக்கு அனுப்பலாம்.

**மஸ்கோவி**

கொண்டை சிவப்பு நிறமானது. தலையில் இறகுகள் காணப்படமாட்டாது. இவைகளை அழகுக்காக வைத்திருக்கலாம். குரல் மிகவும் மெருதுவானது. மிக வலிமையாகவும் வேகமாகவும் பறக்கக்கூடியவை. ஆனால் இவ்வினங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுடைய கூட்டில் இருந்து ஒரு போதும் தொலைவில் பறக்காது. முட்டைகள் பெரிதானவை. தாய்மை கொள்ளும் தன்மையும், உற்பத்தி வீதமும் உயர்வானது.

இறைச்சிக்காக வளர்க்கும்போது, இப்பறவைகளை 10 - 12 கிழமைகள் வயதாய் இருக்கும் போது வெட்டலாம். இந்நேரத்தில் ஆண் பறவையின் நிறை கிட்டத்தட்ட 4 கிலோ கிராம் ஆகவும், பெண்ணினது நிறை 2.3 கி. கிராம் ஆகவும், இருக்கும். மஸ்கோவி இன பறவைகளை ஒருபோதும் மற்றைய இனப்பறவைகளுடன் கலப்பில் ஈடுபடுத்தக்கூடாது. ஏனென்றால் இக்கலப்பு இரண்டாவது பரம்பரையில் மலட்டுத்தன்மைக்கு இட்டுச் செல்லும். குஞ்சு பொரிக்கும் காலம் 35 நாட்கள். மஸ்கோவி இனத்தில் ஏழு வகைகள் உண்டு. ஆனால் இவற்றுள் வெள்ளை நிற வகை பிரபல்யம் வாய்ந்தது.

**காக்கி கம்பெல்**




முட்டையிடும் நோக்கத்திற்கென வளர்க்கப்படும் சிறந்த இனமாகும். முட்டைகள் வெள்ளை நிறமானவை, கிட்டத்தட்ட 70 கிராம் நிறையுடையவை. ஒன்றிலிருந்து சராசரியாக 300 முட்டைகளைப் பெறலாம். ஆண் பறவையினது கழுத்து, சிறகு, நெஞ்சு போன்ற பகுதிகள் கபிலம் கலந்த பச்சை நிறமாக இருக்கும். உடலின் ஏனைய பகுதிகள் கபிலம் கலந்த கறுப்பு நிறமாக இருக்கும். சொண்டு பச்சை நிறமானது. கால்கள் செம்மஞ்சள் நிறமானது. பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள் காக்கி நிறமானவை. அயனமண்டல காலநிலைகளுக்கு எதிர்க்கும் ஆற்றல் கொண்டவை. தலை கீழ் நோக்கியவாறு இருக்கும். கழுத்து சிறிதளவு நீண்டதாக இருக்கும். வயது 4 1/2 மாதமாக இருக்கும்போது இவை முட்டையிடத் தொடங்கும். இரண்டாவது வருடத்தில் அதிகூடிய முட்டை உற்பத்தி நிலையை அடையும்.

**இந்தியன் றணர்**



முட்டைக்கான சிறந்த இனமாகும். ஒரு வருடத்தில் முட்டை உற்பத்தி சராசரியாக 250 ஆகும். நடக்கும்போது இவைகள் உடம்பை நேராக வைத்திருக்கும். மிகவும் சுறுசுறுப்பானதும், எடை குறைவாகக் கொண்டதுமான இனமாகும். வளர்க்கும் முறையில் திறந்த வெளியைத் தேர்ந்தெடுத்தால் அவ்வெளி பலமான வேலிகளைக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு நிறமுள்ள பறவைகள் தற்போதுள்ளன. இவ் இனங்கள் வெள்ளை அல்லது சாம்பல் அல்லது வெள்ளை நிறங்களில் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெலுவி**

தாராக் குஞ்சுகள் மஞ்சள் நிறமானவை. வளர்ந்து முதிர்ச்சியடையும் போது வெள்ளை நிறமாக மாறும். ஒரு வருடத்திற்கு சராசரியாக 275 முட்டைகளை இடும். முதிர்ச்சியடைந்த பறவை கிட்டத்தட்ட 3.5 கிலோ கிராம் நிறையைக் கொண்டிருக்கும். பிரபல்யமான இனம் ஆகும். முட்டைகள் வெள்ளை நிறமானவை, அளவில் பெரியவை, கிட்டத்தட்ட 60 – 70 கிராம் நிறையைக் கொண்டிருக்கும் 5 1/ 2 மாத வயதாய் இருக்கும்போது இவைகள் முட்டையிடத் தொடங்கும். 8 கிழமைகள் வயதுடையதாய் இருக்கும்போது இவ்வினப் பறவைகள் 2.2 கிலோ கிராம் நிறையுள்ளதாக இருக்கும்.

**பெற்றேஸ்**

முழு வளர்ச்சியடைந்த பறவைகள் கபிலம் அல்லது கபிலம் கலந்த வெள்ளை அல்லது நீலக் கறுப்பு நிறமாக இருக்கும். 5 1/ 2 மாத வயதாய் இருக்கும்போது முட்டையிடத் தொடங்கும். முட்டைகள் வெள்ளை நிறமானவை, கிட்டத்தட்ட 40 – 50 கிராம் நிறையுடையவை. இளம் தாராக் குஞ்சுகள் கபிலம் கலந்த சேற்று நிறமாகக் காணப்படும்.

## தாராக்குஞ்சுகளினுடைய பராமரிப்பு

தாராக்குஞ்சுகள் கடுமையான சுற்றூடலிலும் வாழ்வதற்கு இசைவாக்கம் உடையது. ஆனபடியால் கோழிக்குஞ்சுகளைவிட தாராக்குஞ்சுகளின் பராமரிப்பு இலகுவானது. தாராக்குஞ்சுகளைக் கருக்கொள்ளும் தன்மை கொண்ட முட்டைகளை அடைகாத்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

**அடைகாத்தல்** ( Incubation)

(1) செயற்கை முறை :- குஞ்சு பொரிக்கும் கருவிகளைப் பயன்படுத்துதல்.

(2) இயற்கை முறை :- கோழிகளைப் பயன்படுத்துதல்.

மஸ்கோவி இனம் – குஞ்சு பொரிக்கும் காலம் 35 நாட்கள்

மற்றைய இனங்கள் – குஞ்சு பொரிக்கும் காலம் 28 நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைகளில் செயற்கை முறையில் குஞ்சு பொரிக்கும் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. குஞ்சு பொரித்தலுக்கு சேகரிக்கப்படும் முட்டைகள் சுத்தமானதாக இருக்க வேண்டும். சேமித்து வைக்கும்போதும் கவனமாக இருத்தல் வேண்டும். கோழி முட்டைகளைப் பார்க்கிலும் தாரா முட்டைகளுக்கு அதிகம் ஈரத்தன்மை தேவை. குஞ்சு பொரிக்கும் காலத்தின் இரண்டாவது கிழமையின்போது (14 நாட்களில்) முட்டையின் மேல் சுடுநீர் (100° f அல்லது 37 ° c) ஒரு நாளைக்கு இரு தடவைகள் தெளித்தல் வேண்டும். நாட்கள் 21 – 28 வரைக்கும் ஒரு நாளைக்கு நான்கு தடவைகள் சுடுநீர் தெளித்தல் வேண்டும். பொரித்த பின்பு தாராக்குஞ்சுகளைப் பூரணமாக உலரும் வரை தொடக்கூடாது.

தாராக் குஞ்சு பொரிப்பதற்கு அடைக் கோழிகளைப் பயன்படுத்தலாம். (ஏனெனில் தாராக்கள் அடைகாக்கும் தன்மை இல்லாததாக உள்ளன. அல்லது தாய்மை கொள்ளும் வீதம் குறைவாக உள்ளன). ஒரு அடைகாக்கும் கோழியினல் 15 தாராக் குஞ்சுகளைக் காக்கவும், 10 தாரா முட்டைகளை அடைகாக்கவும் முடியும். தாராக் குஞ்சுகள் 2 – 3 கிழமைகள் வயதுடையதாய் இருக்கும்போது அவைகளைக் குஞ்சு காக்கும் கோழியில் இருந்து பிரித்து விடல் வேண்டும். குஞ்சு காத்தலுக்காக செயற்கைமுறையான குஞ்சு காக்கும் கருவிகளையும் பயன்படுத்தலாம். செயற்கைமுறை குஞ்சுகாக்கும் கருவிகளைப் பயன்படுத்தும் போது வெப்பநிலை, இடப்பிரமாணம், உணவு நீர் போன்றவைகளைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

**வெப்பநிலை**

செயற்கைமுறை – குஞ்சுகளைக் காக்கும் கருவிகளைப் பயன்படுத்தும்போது அவற்றின் வெப்பநிலையைச் சரியாக ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.


குஞ்சுகளை, அடைகாக்கும் கருவியில் அறிமுகப்படுத்தும்போது கருவியின் வெப்பநிலை 85° – 90 °f (29 °c - 32 °c) ஆக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு மூன்று நாட்களுக்கொரு தடவையும் குஞ்சுகாக்கும் கூட்டின் வெப்பநிலை 5 °f - ( 3 °c) இனல் குறைத்தல் வேண்டும். மின்குமிழ் தொங்கவிடப்பட்டுள்ள உயரத்தை மாற்றுவதன் மூலம் குஞ்சுகாக்கும் கூட்டின் வெப்பநிலையை ஒழுங்கு படுத்தலாம். காலநிலை சாதகமாயும், வெளிச் சுற்றுடல் வெப்பமாயும் இருந்தால் குஞ்சுகாக்கும் கூட்டினது வெப்பநிலையை 5 – 10 நாட்களிற்கு அகற்றலாம். ஆனல் மழை காலமாக இருந்தால் 10 நாட்களுக்கும் வெதுவெதுப்பாக இருக்க வெப்பநிலையைக் கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85°f (29°c) - முதலாம் நாள்
80°f (27°c) - நாலாம் நாள்
75°f (24°c) - ஏழாம் நாள்
70°f (21°c) - பத்தாம் நாள்

குஞ்சு காக்கும் கூட்டினது வெப்பநிலையைச் சரிபார்க்க வெப்பமானியை உபயோகிக்கலாம். வெப்பமானி மின்குமிழில் இருந்து 6" தூரத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். குஞ்சு காக்கும் கூட்டினுள் வெப்பத்தை வழங்குவதற்காக மின்குமிழ் அல்லது விளக்கினைப் பயன்படுத்தலாம். 100 தாராக் குஞ்சுகளுக்கு 100 வோல்ட் மின்குமிழ் போதுமானதாகும்.





பாதுகாப்பு வளையம்

x. நிலமட்டத்திலிருந்து மின்குமிழின் உயரம் - 15"


y. மின்குமிழின் மத்தியிலிருந்து வெப்பமானி
வைக்கப்பட்டுள்ள இடத்திற்கும் இடையேயுள்ள தூரம் - 6"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கூடிய காற்று



கூடிய வெப்பம்



குறைந்த வெப்பம்




சரியான வெப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் மேல் சற்று உயரத்தில் அமைக்கப்பட்ட குஞ்சுகாக்கும் கூடு




குஞ்சுகாக்கும் கூடுகளுக்கான கூளம்

இதற்காக உலர்புல்லினைப் பயன்படுத்தலாம். (வைக்கோல் / மரத்தூள்) கூட்டின் தரையானது 3" - 4" உயரம் வரை கூளத்தினால் நிரப்பப்பட்டிருத்தல் வேண்டும். சுத்தம் செய்யும்போது 1" அகலமான கூளப்படையை அகற்றுதல் வேண்டும்.

## நீர் உணவு விநியோகம்

தாராக்குஞ்சுகளை குஞ்சுகாக்கும் கூட்டில் வைத்து இருக்கும்பொழுது கொடுக்கவேண்டியவை :-



சுத்தமான நீர் இலீற்றர் ஒன்றுடன் குளுக்கோஸ் மேசைக்கரண்டி - 1 1/2 விற்றமின் பி மாத்திரைகள் 6 - 8 உம் கரைக்கப்பட்டு கொடுக்கப்படல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிற்கு போதியளவு இடவசதியை வழங்குதல் வேண்டும். உணவை நீருடன் கலந்து ஈரப்பற்றுடன் கொடுக்கும்போது உணவுப் பொருட்கள் வீணாகும் அளவைக் குறைக்கலாம்.




மரச்சட்டத்தினால் அமைக்கப்பட்ட
உணவுப் பாத்திரம்



மூங்கிலினால் அமைக்கப்பட்ட
உணவுப் பாத்திரம்

**இடவசதி**


ஒரு நாளில் இருந்து ஒரு மாதம் வரையுள்ள – 5 × 9 அடி /100 பறவைகளுக்கும் குஞ்சுகளுக்கும்

ஒரு மாதத்தில் இருந்து இரண்டு மாதம் வரை – 10 × 8 அடி / 90 – 100 பறவைகளுக்கு

இரண்டு மாதங்களின் பின்னர் பறவைகளைச் சூழலில் வளர்க்கலாம். இரவில் நூறு பறவைகளுக்கு 12' × 10' இடவசதி போதுமானது. அடைத்து வளர்க்கும் முறையில் 6 – 7 ச. அடி ஒரு பறவைக்குப் போதுமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியில் வளர்க்கும் முறையில்
ஒரு பறவைக்கு தேவையான நிலப்பரப்பு
20 சதுர அடி

பறவைகளின் வயது நான்குமாதமாக இருக்கும்போது அவைகளைக் குளங்களில் அல்லது குட்டைகளில் வளர்க்கலாம்.

### உணவு கொடுக்க வேண்டிய அளவு

இலங்கையில் வெலுவி, பெற்ரோஸ் ஆகியவை மிகவும் பிரபல்யமான இனங்களாகும். பெற்ரோஸ் ஒரு நாளில் இருந்து ஒரு மாதம் வரையுள்ள பறவைகளுக்கு ஒரு அவுன்ஸ் உணவு கொடுக்கப்படவேண்டும்.

வெலுவி இனம் ஒரு நாளில் இருந்து ஒரு மாதம் வரையுள்ள பறவைகளுக்கு 1 1/2 அவுன்ஸ் உணவு

ஒரு மாதமும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பறவைகளுக்கும்

மாதம் 1 இருந்து 2 வரை - 2 1/2 அவுன்ஸ்
மாதம் 2 இருந்து 3 வரை - 3 அவுன்ஸ்
மாதம் 4 இருந்து 5 வரை - 4 அவுன்ஸ்

5 மாதத்திற்கு மேற்பட்ட வயதுடைய பறவைகளுக்கு 5 - 6 அவுன்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்கைமுறையில் தயாரிக்கப்பட்ட தீவனங்களை உணவாகத் தாராக்களுக்கு கொடுப்பது இலாபம் தரக்கூடியதல்ல. இதனால் நாங்கள் சமையலறைக் கழிவுகளைப் பயன்படுத்தி ஒழுங்கான பங்கீட்டு முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளைத் தாராக்களுக்கு கொடுக்கலாம். இம்முறையில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் மலிவானவையும் இலகுவாகக் கிடைக்கக்கூடியவையுமாகும்.

**சந்தையில் அல்லது சூழலில் இருந்து கிடைக்கக்கூடிய மலிவான உணவுப்பொருட்கள்**

**தானியங்களும் பக்க விளைவுப் பொருட்களும்**

அரிசிக் குறுணல்
தவிடு
சோளம்
மக்காச்சோளமாவு / கூலமாவு

**எண்ணெய் விதைகளும் / பிண்ணாக்குகளும்**

தேங்காய்ப் பிண்ணாக்கு
மாவாக்கப்பட்ட மாவிதைகள்
மாவாக்கப்பட்ட பருத்தி விதைகள்
மாவாக்கப்பட்ட புளியம் விதைகள்

**அவரை விதைகளும் தோல்களும்**

கவ்பி விதைகள்
கவ்பி கோது
சோயா அவரை விதைகள்
சோயா அவரை கோது
வெல்பட் அவரை விதைகள்

**விலங்குப்பக்க விளைபொருட்கள்**

மீன் தூள்
இறால் கழிவுகள்
இறால் கூனி
கருவாட்டுத்தூள்

**கனிப்பொருட்கள்**

தாராக்களுக்கு மாவாக்கப்பட்ட சிப்பித்தூளைக் கொடுக்கலாம். சிப்பித்தூள் போசாக்குடையதும், இலாபகரமானதுமாகும். போதுமானளவு பச்சை இலைகளையும் பறவைகளுக்கு கொடுக்க வேண்டும். இவ்வழியில் பறவைகளுக்கு விற்றமின்களைக் கொடுக்கலாம். (விற்றமின்கள் பச்சை இலைகளில் அதிகமாகக் காணப்படும்.)

உணவுப் பாத்திரம் துப்பரவாக இருத்தல் வேண்டும். நடுவிற் பிளக்கப்பட்ட இறப்பர் டயரை உணவுப்பாத்திரமாகப் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலகுவில் கிடைக்கக்கூடிய பலவகையான திட்டமிட்ட உணவுக்கூறு

| ஏ | பீ | சீ |
|---|---|---|
| நாட்குஞ்சுகளிற்கான திட்டமிட்ட உணவுக் கூறு | வளரும் குஞ்சுகளுக்கான திட்டமிட்ட உணவுக்கூறு | முட்டையிடும் தாராக் களின் திட்டமிட்ட உணவுக்கூறு |
| அரிசிக் குறுணல் (சிறிதளவு நீர் சேர்க்கப்படல் வேண்டும்.) | அரிசிக்குறுணல் 30 பகுதி<br>அரிசித்தவிடு 30 பகுதி<br>மீன்தூள் 20 பகுதி<br>புண்ணாக்கு 10 பகுதி<br>சிப்பித்தூள் 5 பகுதி<br>இக்கலவைக்கு நீர் சிறிதளவு சேர்த்துக் கொடுக்கவும் | அரிசித்தவிடு 30 பகுதி<br>சோளம் 20 பகுதி<br>மீன்தூள் 20 பகுதி<br>சிப்பித்தூள்<br>இக்கலவைக்கு நீர் சிறிதளவு சேர்க்கவும் |

| | ஒருநாள் – 6 கிழமை வரை | கொழுப்புக் கான தாராக்கள். | முட்டைக்கான தாராக்கள் |
|---|---|---|---|
| சோளம் | 20 பகுதிகள் | 10 பகுதிகள் | 15 பகுதிகள் |
| அரிசித்தவிடு | 40 பகுதிகள் | 50 பகுதிகள் | 40 பகுதிகள் |
| தேங்காய்ப் பிண்ணாக்கு | 12 பகுதிகள் | 20 பகுதிகள் | 18 பகுதிகள் |
| மக்காச் சோளம் | 15 பகுதிகள் | 15 பகுதிகள் | 15 பகுதிகள் |
| கருவாட்டுத்தூள் | 10 பகுதிகள் | 03 பகுதிகள் | 10 பகுதிகள் |
| கனிப்பொருட்கள் கலவை | 01 பகுதி | 02 பகுதிகள் | 02 பகுதிகள் |
| பால்மா | 02 பகுதிகள் | – | – |
| | 100 | 100 | 100 |

# ஆண், பெண் பறவைகளில் இலிங்க வேறுபாடுகள்

(1) 6 – 8 கிழமைகள் வயதுடையதாய் உள்ளபோது ஆண் பறவைகள் மிருதுவான சத்தத்தையும், பெண் பறவைகள் தடித்த சத்தத்தையும் பெறும்.


(2) ஆண் பறவைகளின் குதப்பகுதியில் உள்ள இறகுகளின் இலக்கு உள்நோக்கியவாறுமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வளரும் பறவைகள்

தாராக்குஞ்சுகள் ஒரு மாத வயதை அடையும்போது வளரும் குஞ்சுகள் எனப்படும். இப்பருவத்தில் நாங்கள் இவைகளுக்கு தொடர்ந்து போதியளவு உணவூட்டுதல் வேண்டும். இவற்றிற்கு சிறு செய்குளம் (Pond) ஒன்றை அமைத்து அதன் மூலம் நீரை வழங்குவது மிகவும் நல்லதாகும்.




சிறு குழி ஒன்றை வெட்டி அதன் அடிப்பகுதி சில படைகள் சேற்றினால் நிரப்பப்பட்டு நன்கு அமர்த்தப்படல் வேண்டும். பின்பு இது நீரால் நிரப்பப் பட்டு தற்காலிக சிறு செய்குளமாக (Pond) பாவிக்கலாம்.

இல்லாவிடின்




பறவைகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால் பெரிய பேசின் அல்லது பெரிய நீர் கொள்பாத்திரங்களை நீர்த்தாங்கு தொட்டிகளாக உபயோகிக்கலாம்.

தாராக்களுக்கு முதல் உணவு கூட்டிலிருந்து வெளிப்படுத்தும்போது கொடுக்கவேண்டும். இவற்றைச் சிறிய அடைப்புக்குள் வளர்ப்பதாயின் மதியபோசனம் அளிக்கப்படல் வேண்டும். இரவு போசனத்தை பிற்பகல் வேளையில் கொடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராக்கள் உணவு உட்கொள்ளும்போது நீர் பருகுதலையும் சிப்பித்தூள் உட்கொள்ளுவதையும் விரும்புவதால் அப்பொருட்களை உணவுப் பாத்திரத்திற்கு அருகாமையில் வைத்தல் முக்கியமாகும்.


கோழிகளிலும்பார்க்க கூடியளவு புல்லைத் தாராக்களுக்கு கொடுக்கமுடியும். இதனல் உணவுக்காக செலவாகும் பணத்தின் அளவைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

## வீடமைப்பு

**கூட்டிலும், வெளியிலும் விட்டு வளர்க்கும் முறையில் ( 25 பறவைகளுக்கு)**

இலகுவில் கிடைக்கக்கூடியதும் நன்கு பாவிக்கக்கூடியதுமான பொருட்களைப் பயன்படுத்தி அமைத்தல் வேண்டும்.
3 1/2 சதுர அடி / ஒரு பறவைக்கு
25 பறவைகளுக்கு 87.5 சதுர அடி

**வீடமைப்பின் பக்கத் தோற்றம்**





கூரை :- அஸ்பெஸ்ரஸ் அல்லது ஓலைமட்டை
தரை :- களி நீளம் 11 ' × 8 '
முன் பகுதியும் பின்பகுதியும் :- வலை
பக்கம் :- மூங்கில் அல்லது கமுகு மரத்தடியிஞல் வேயப்பட்டிருத்தல் வேண்டும்.
கூளம் :- உமி, மரத்தூள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பின் முற்பக்கத் தோற்றம்




வீடமைப்புக்கான செலவுகள் (1987 ம் வருடத்தின்படி)

இந்தக்கூட்டினைத் தயாரிப்பதற்கு ரூபா 550/- போதுமானதாகும்.

## முட்டைக்கான பறவைகளைத் தேர்ந்தெடுத்தல்

ஒரு கூட்டினுள் 50 பறவைகளை வளர்க்கலாம். கனிப்பொருட்தேவை கோழிக்குஞ்சுகளை விட தாராக்களுக்கு அதிகமானதாகும்.

முட்டைக்கான கோழிகளை வளர்ப்பதற்கு கூடு (வீடு) அவசியமானதாகும். இல்லாவிடின் உற்பத்தி வீதம் குறைவடையும்.

10 பெண் பறவைகளுக்கு ஒரு ஆண் பறவை என்னும் வீதத்தில் வளர்த்தல் வேண்டும்.

## இறைச்சிக்கான பறவைகள்

8 - 10 கிழமைகள் வயதாய் இருக்கும் இவற்றைச் சந்தைக்கு இறைச்சிக்காக அனுப்பலாம்.

இறைச்சி ஒரு கிலோ 26/- , 28/- ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாரா வளர்ப்பினது பொருளாதாரம்

நோக்கம் :- முட்டைக்காக 25 பறவைகள்/ஒரு வருடத்திற்கு

| வருமானம் | ரூ.ச. | செலவு | ரூ.ச |
|---|---|---|---|
| 1. கழித்தல் | -- | ஒருநாள் குஞ்சு | 195.00 |
| 2. முட்டைகளை விற்றல் | 6325/- | வீட்டமைப்பு | 350.00 |
| 3. கூழத்தை விற்றல் | 125/- | | |
| 4. கழித்தல் | -- | உணவு | 3850.00 |
| 5. வெற்று உணவுப் பைகளை விற்றல் | 25/- | மற்றையவை | 50.00 |
| | 6475/- | | 4445.00 |

## நோய்த்தடுப்பு

தாராக்கள் பொதுவாக நோய் எதிர்ப்புச்சக்தி உடையன.

**குறைபாடுகள்**

விற்றமின் பி குறைபாட்டை நீக்க விற்றமின் பி குளிகைகளை நீருடன் கலந்து கொடுக்கவும்.

**குளிர்**

குஞ்சுகாக்கும் பருவத்தில் பொதுவாக கூழமானது இலகுவில் ஈரமாக்கப் படுகிறது. இது குஞ்சுகளுக்கு குளிரூட்டி நியூமோனியாவை ஏற்படுத்துகிறது. எனவே கூழத்தை சுத்தமானதாயும், உலர்ந்ததாகவும் வைத்திருக்கவும்.

**குடற்புழுக்கள்**

வெளியில் விட்டு வளர்க்கப்படும் முறையில் குடற்புழுக்கள் பொதுவான தாகும். முதலாவது பூச்சி மருந்து 6 வது கிழமையில் கொடுத்தல் வேண்டும்.

**கெப்பஸ்ரற்றிஸ்**

இது வைரஸினால் ஏற்படுகின்ற நோயாகும். இறப்பு வீதம் 80 – 90 % 1 – 3 கிழமை வயதுடைய குஞ்சுகளைப் பாதிக்கின்றது. தலையானது இறந்த பறவைகளில் பின்நோக்கித் திரும்பியிருக்கும். பறவைகளுக்குத் தடுப்பூசி போடப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொட்டுல்சம்**

பொதுவான நோய் உணவுடன் மல இளக்கியைக் கலந்து கொடுக்கலாம்.

**ஒன்றையொன்று கொத்துதல்**

பல்வேறு காரணிகளினால் ஏற்படுகின்றது.

1. கல்சியம் குறைபாடு
2. புரதம் குறைபாடு
3. இடவசதி போதாமை

**அஸ்பெஜிலோசிஸ்**

இது பங்கசுவினால் ஏற்படுகின்ற ஒரு நோய் ஆகும். சுத்தமான நீரை வழங்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாக்கம் :- ரூபா இரத்தினவேல்

சித்திரம் :- பி.கே. திஸ்ஸகுமார

தட்டச்சு :- ரஞ்ஜினி ஜேம்ஸ்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org